<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 71/2015 | வா.சா. | : 1 |
| பெயர் | : அறிவழகன் | த/பெ. | : சுப்பிரமணி |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : நத்தம் கோவில்பட்டி |
| தேதி | : 19.06.2024 | வயது | : 54 /2024 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்:

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 11.42 A.M. – 11.52A.M.

<u>2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

10) நத்தம் வட்டம், நத்தம் சப்டி, புல எண்.212/12 ல் உள்ள நிலம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி. மேற்படி புல எண்.212/12 நத்தம் நிலவரித்திட்டத்தில் GR புல எண்.531 ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. புல எண்.531ல் வீட்டுமனைகள் பிரிக்கப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரி. GR புல எண்.531/36ல் பாதை உள்ளதென்றால் ஆமாம். அந்தப் பாதையில் தான் நானும், மற்ற வீட்டுமனைதாரர்களும் நடந்து செல்லமுடியும் என்றால் ஆமாம். அந்த பாதையின் அளவு கிழக்குப் பக்கம் தென்வடல் 4.8 மீட்டர் அளவில் உள்ளது என்றால் சரி.

11) அந்த பாதைக்கு தெற்குப்பக்கம் 1ம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் ஆமாம். அந்த வீடு GR புல எண்.532/13ல் உள்ளது என்றால் சரி. 1ம் பிரதிவாதி கிழக்குப் பக்கம் வியாபாரத்திற்கு கடைகள் கட்டியுள்ளார்கள் என்றால் ஆமாம். அந்த கடையின் வடக்குப் பக்கம் GR புல எண்.531/36ல் உள்ளது என்றால் சரி. GR புல எண்.531/36ல் உள்ள பாதையில் தென்புறம் 5 அடிக்கு 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கடைகள் கட்டியுள்ளார் என்றால் ஆமாம். நான் இவ்வழக்கை 1ம் பிரதிவாதிக்கு எதிராகத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம்.

12) நான் 1ம் பிரதிவாதிக்கு எதிராகத்தான் வழக்கில் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் ஆமாம். 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரி. நான் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எந்த பரிகாரமும் கேட்காததால் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிரான எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 19.06.2024 கையெழுத்து செய்துள்ளார்.

V. UDAYA SURIYA

Digitally signed by V. UDAYA SURIYA
Date: 2024.06.19 10:08:30 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.